INJRI
International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

# நுண்கலை வழியே பாடம் கற்பித்தல் முறை

**முனைவர் க. கோபாலகிருஷ்ணன்**
*உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை*
*ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறவியல் கல்லூரி(தன்னாட்சி)*
*திருவானைக்காவல் திருச்சி.*

## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய கற்றல் கற்பித்தல் முறைகள் மாணவர்களுக்கு மன இறுக்கத்தையும், கற்றலின் மீது ஒரு ஆர்வமின்மையும் ஏற்படுத்துவதாக ஒரு கருத்து நிலவுகின்றது அதனை மாற்றி மாணவர்களுக்கு பாடல், நாடகம், பொம்மலாட்டம் போன்ற நுண்கலைகளின் மூலம் பாடத்தை கற்பிக்கின்ற பொழுது அவர்கள் ஆர்வமுடனும், எளிதில் புரிந்து கொள்வதற்கும் மனதில் பதிவதற்கும் நுண்கலை வழி கற்பித்தல் பெரிதும் பயன்படும்.இதனை விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## நுண்கலைகள்

நுண்கலைகள் என்பது பாரம்பரியமாக நமது பண்பாடு, கலாச்சாரத்தின் வழியாக வெளிப்படுத்தப்படும் பாடல், நாடகம், பொம்மலாட்டம், இசை, ஓவியம் போன்ற கலைகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டங்களை இந்நுண்கலைகளின் வழியாக மாணவர்களுக்கு கற்பிக்கின்ற பொழுது எளிமையாக புரிந்துக் கொண்டு அதன் கருத்தை அவர்கள் முழுமையாக உணர்வதற்கும் இந்த நுண்கலைகள் பெரிதும் உறுதுணையாக அமையும்.

## நுண்கலை வழிகற்பித்தல்

கற்றல் கற்பித்தலில் நுண்கலை வழி கற்பித்தல் ஒரு புதுமையான எளிமையான வழிமுறையாகும். மாணவர்களின் மனநிலையை கவர்ந்து அவர்களாகவே கற்றல் கற்பித்தலில் முழுமையான ஆர்வத்துடன் ஈடுபட நுண்கலை கற்பித்தல் ஒரு சிறந்த வழிமுறையாகும்.

நுண்கலைகளின் மூலமாக மொழிப்படங்கள் (தமிழ், ஆங்கிலம்) மற்றும் வரலாறு போன்ற பாடங்களை முதன் முயற்சியாக கொண்டு செயல்படுத்தலாம்.

மொழி பாடங்களை நுண்கலை வழி கற்பித்தல்:

தமிழ் ஆங்கிலப் பாடங்களை நுண்கலைகளின் மூலம் எளிதில் மாணவர்களிடம் கொண்டு சேர்க்க முடியும். செய்யுளின் ஒரு பாடப் பகுதியை எடுத்துக்கொண்டு அதை இசையுடன் பாடி காட்டுகின்ற பொழுது மாணவர்களின் மனதில் அப்பாடல் எளிதில் பதியும். திரைப்பட பாடல்கள், இசைவழியாக மாணவர்கள் கேட்பதனால் அவர்களின் மனதில் எளிதில் பதிந்து பல நாட்களாக நினைவில் இருப்பதனை நாம் கண்கூடாக காண்கிறோம். ஆக தமிழ் இலக்கிய ஆங்கில இலக்கிய செய்யுள் பாடல்களை ஆசிரியர் கற்பித்தலில் நுண்கலைகளின் மூலம் செயல்படுத்த வேண்டும்.

### நாடகம் வழி கற்பித்தல்:

கற்றல் கற்பித்தலில் செய்யுள் மற்றும் உரைநடை, வரலாறு போன்ற பாடங்களை மாணவர்களுக்கு கதையாக எடுத்துரைக்க வேண்டும். பின்பு அக்கதையில் உள்ள கதாபாத்திரங்களாக மாணவர்களை இனம் பிரிக்க வேண்டும். அவர்களின் மூலம் மைய கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நாடகம் நடிக்கப்படவேண்டும்.

மேற்கூறிய நாடக நடித்தலின் மூலம் மற்ற பங்குப் பெறாத அனைத்து மாணவர்களும், பாடத்தின் கருத்துக்களை, மனதில் காட்சியாக பதிவு செய்து கொள்வர். இவை அவர்களுக்கு என்றும் அழியாமல் மனதில் இருக்கும். (சான்றாக) ஒரு திரைப்படத்தை காணுகின்ற மாணவன் அக்காட்சியை மனதிலிருந்து எப்பொழுதும் நீங்குவதில்லை.

தமிழ், ஆங்கிலம், வரலாறு போன்ற பாடங்களில் உள்ள மையக் கருத்துக்களை மையமாகக் கொண்டு பொம்மலாட்டத்தின் மூலமாக வெளிப்படுத்துவதால் மாணவர்கள் அனைவரும் கற்றலில் ஆர்வம் காட்டுவார்கள்.

**நாடகங்களை பல வகைகளாக வகுக்கலாம்.**

1. புராண நாடகங்கள்
2. இதிகாச நாடகங்கள்
3. சமூக நாடகங்கள்
4. ஓரங்க நாடகங்கள்

என பல வகையாக பிரிக்கலாம்.

இன்றைய கற்றல் கற்பித்தலில் ஓரங்க நாடகங்களின் வழியாக எளிமையாக கற்பிக்கலாம். ஓரங்க நாடகங்களை 5 அங்கங்களாக பிரிக்கலாம்.

### முதல் சந்தி

நாடகப் பாத்திரங்களைக் கொண்டு முதலில் கதையை உருவாக்குதல் வேண்டும். இதனை இந்த நாடகத்தின் தொடக்கம் என்று அழைப்பர்.

### இரண்டாம் சந்தி:

கதையை தொடர்ந்து நடத்திச் செல்லுதல் ஆகும். இதை வளர்ச்சி என்று அழைக்கலாம்.

### மூன்றாம் சந்தி

ஒவ்வொரு காட்சியின் விளைவை தோன்றச் செய்து வெளிப்படுத்துவதாகும். இதனை விளைவு என்று அழைக்கலாம்.

### நான்காம் சந்தி

கதையின் விளைவு பார்வையாளருக்கு புரியும் வகையில் அமைப்பதாகும். இதனை உச்சம் என்று அழைப்பர்.

### ஐந்தாம் சந்தி

கதையின் முடிவு அதன் மொத்த கருப்பொருளை தெளிவாக பார்வையாளர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் தீமை அளித்து நன்மை தருவதே முடிவு ஆகும்.

சந்தி என்பதை காட்சி என்று கூறலாம். இன்று பள்ளி கல்லூரிகளில் பெரும்பாலும் இந்த ஓரங்க நாடகம் வகை மாணவர்களைக் கொண்டு நடிக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலமாக பள்ளியில் பயில்கின்ற மாணவர்களை நாடகத்தின் பங்கு பெறச் செய்து

அவர்கள் மேடை பயத்தை போக்கவும், தனித் திறமையை வெளிப்படுத்தவும் ஓரங்க நாடக முறை பெரிதும் துணைபுரிகின்றது.

கல்வியில் பின் தங்கிய மாணவர்களும் கற்றலில் சிறந்து விளங்குகின்ற மாணவர்களை விட சிறப்பாக நடிப்பதை இதன் மூலம் காண முடிகின்றது.

பாடத்திட்டங்களையும், அதன் கருத்துக்களையும் மாணவர்களுக்கு செவி வழியாக சொல்லிக் கொடுபத்தைக் காட்டிலும் ஓரங்க நாடகத்தின் மூலமாக பாடக்கருத்தை நடிக்கின்ற பொழுது மாணவர்கள் ஆர்வமாகவும், அவர்கள் மனதில் ஆழமாகவும் பதிவதை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

மேற்கூறிய வகையில் ஓரங்க நாடகத்தின் மூலமாக பாடப் பொருளை கற்பிக்கின்ற பொழுது எளிமையாக மாணவர்கள் புரிந்துக் கொள்வர். இதற்கு பெரிதும் நுண்கலை வழி கற்பித்தல் உதவுகின்றது.

## பொம்மலாட்டம வழி கற்பித்தல்

பாடங்கள், செய்யுள்களை நாடகமுறை மட்டுமின்றி பொம்மலாட்டத்தின் மூலமாகவும் கற்பித்தலை மேற்க்கொள்ளலாம்.

பொம்மலாட்டம் என்பதை தமிழில் பாவைக்கூத்து என்று அழைக்கப்படுகிறது. இது தோற்பாவைகூத்து மரப்பாவைக்கூத்து என இரண்டு வகைப்படும். மரத்தால் உருவ பொம்மை செய்து, திரைக்குப் பின்னால் இருந்து பொம்மையை ஆட்டி, அசைத்து செய்யும் கலை பொம்மலாட்டக் கலையாகும்.

மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும், ஆர்வமுடனும் கற்றலில் ஈடுபடுவர் அதற்கு இந்நுண்கலை வழிக்கற்பித்தல் பெரிதும் துணைபுரிகின்றது.

தமிழ், ஆங்கிலம், வரலாறு போன்ற பாடங்களில் உள்ள மையக் கருத்துக்களை மையமாகக் கொண்டு பொம்மலாட்டத்தின் மூலமாக வெளிப்படுத்துவதால் மாணவர்கள் அனைவரும் கற்றலில் ஆர்வம் காட்டுவார்கள்.

## மேலும் பல நுண்கலைகள்

பாட்டு, இசை, நாடகம், பொம்மலாட்டம், மட்டுமின்றி,

1. ஓவியம்,
2. நடனம்,
3. வரைபடங்கள்
4. களிமண் உருவங்கள்

போன்ற நுண்கலைகளின் மூலமாகவும் தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய பாடங்களை சிறப்பாகக் கற்பிக்கலாம்

## மேலை நாடுகளில் நுண்கலை வழி கற்பித்தல்

நம்நாடு மட்டுமில்லாத இலங்கை, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற மேலை நாடுகளில் நுண்கலை வழி கற்பித்தல் சிறப்பாக நடைப்பெற்று வருகின்றது. இலங்கையில் பள்ளிக் கல்வியில் நுண்கலை ஒரு பாடமாகவும், தினந்தோறும் ஒரு வகுப்பும், நடைபெற்று வருகின்றது. நுண்கலை வழியின் மூலமாக எளிமையாக, முழுமையாக கருத்துக்களை புரிந்துக் கொள்ள இக்கற்றல் பெரிதும் பயன்படுவதாக அம்மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

நுண்கலை வழி கற்பித்தலை மேற்கொள்கின்ற ஆசிரியர்களும் இதில் மாணவர்கள்

ஆர்வமுடன் முதல், இடை, கடை என்ற மூன்று நிலை மாணவர்களும் முழுமையாக ஈடுபடுவதாக கூறுகின்றனர்.

தற்பொழுது தமிழ், ஆங்கிலம், வரலாறு ஆகிய மூன்று பாடங்களை நுண்கலை வழி கற்பித்தல் மூலமாக, செயல்படுத்துவதாகவும், குறிப்பிட்டுள்ளனர். இந்த வகையில் கணிதம், அறிவியல் போன்ற பாடங்களை நுண்கலையின் வழியில் கற்பிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கூறுகின்றனர். நமது அரசம் இதுபோன்ற கற்பித்தல் முறையை ஊக்குவித்து கற்றலை ஆர்வமுடையதாக மாற்றுவதற்கான புதிய வழிமுறையை காணவேண்டும்.

## முடிவுரை

காலங்காலமாக கற்றல் கற்பித்தலில் நடைபெற்று வரும் விரிவுரை முறை சொற்பொழிவு முறை, போன்றவற்றிலிருந்து விடுபட்டு புதுமையாக மாணவர்களே தங்களை பாடக்கதுத்துக்களைப் புரிந்து கொள்வதற்கும் மனதில் எளிமையாக பதிய வைப்பதற்கும் நுண்கலை வழி கற்பித்தல் என்பது 2ஆம் நூற்றாண்டில் ஒரு தலைச் சிறந்த கற்பித்தல் முறையாகும். இதில் அனைத்துப் பாடங்களையும் கற்பிக்க முடியாவிட்டாலும் கற்பிக்கக்கூடிய பாடங்களை சிறப்பாக இதன் மூலம் கற்பிக்கலாம் மற்ற பாடங்களையும் கற்பிப்பதற்கான மாற்று சிந்தனையை முயன்று பார்க்கலாம்.

இந்நுண்கலை வழி கற்பித்தலின் மூலம் அனைத்து மாணவர்களும் ஆர்வமுடன் ஈடுபட்டு, உற்சாகமாய் ஈடுபட இவை பெரிதும் கற்றல், கற்பித்தலில் பயன்படும் ஆகவே இம்முறையை அனைத்து கல்வி நிறுவனங்களும் செயல்படுத்த வேண்டும். அரசு அதற்காக அரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

## மேற்கோள் நூல்கள்:

[1] நுண்கலைகள் , மயிலை சீனி. வேங்கடசாமி ” நாம் தமிழர் பதிப்பகம் , சென்னை-05 டிசம்பர் - 2003.

[2] புதிய நோக்கில் தமில் இலக்கிய வரலர்று , தமிழண்ணல் , மீனாட்சி புத்தக நிலையம், டிசம்பர் - 2014.

[3] வாசன் இந்திய இசை, சங்கீத வித்துவான் டாக்டர்.ருக்குமணி, ரமணி , சாந்தாபப்ளிஷர்ஸ் - மே, 1989.

[4] தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் , மயிலை சீனி. வேங்கடசாமி , நாம் தமிழர் பதிப்பகம் சென்னை-05 டிசம்பர் - 2003.

[5] ச.பாபு , தஞ்சை மாவட்ட கல்வியியல் கல்லூரிமாணவர்களிடம் நுண்கலை திறன் ஈடுபாடு ஓர் ஆய்வு , ஆய்வியல் நிறைர் கல்வியியல் துறை ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைகழகம். தஞ்சை,செப்டம்பர் 2015